## ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் நிரந்தர தர்சனத்தின் அவசியம் - 2

**காஞ்சிபுரம் மஹாத்மியத்தில், ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அருளிசெயலில் ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் பற்றி கிடைக்கும் விவரங்களும், ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் நிரந்தர தர்சன வைபவத்தின் அவசியமும்?**

- **ஸ்ரீ காஞ்சிபுரம் மஹாத்மியத்தில் காஞ்சிபுரம் வரதர் கோயில் மூலவர் தாருமூர்த்தி (மரத்தால் ஆன மூர்த்தி)** என்பது தெளிவாக கூறியுள்ளது.
- **ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அவர்களும் ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் காப்பிடு திருமேனி** அதாவது **தைலம் சாற்ற பட்ட மர திருமேனி** என்று தனது க்ரந்தத்தில் கூறியுள்ளார்.
- காஞ்சீபுரம் ஸ்ரீ வரதர் கோயிலில் ஆராதனத்தில் **ஆதியில் இருந்த மூர்த்தி மரத்தில் செய்யப்பட்ட மூர்த்தி என்பது இதிலிருந்து தெளிவாக தெரிகிறது.**

**வைபவங்கள் உடைய இப்பெருமாளை ஏதோ ஒரு காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக அனந்தஸரஸில் ஆதி அத்திகிரீ வரதரை எழுந்தருள செய்துள்ளனர். இந்த அனந்தஸரஸில் பொதுமக்கள் நீராடுவார்கள், கால் சுத்தம் செய்வார்கள்.** அப்படிப்பட்ட **அந்த குளத்தினுள்** ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு ஆதாரமானவரும், ஆழ்வார்கள், ஆச்சார்யார்களால் கொண்டாடப்படும் **ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் பெருமாளை பகவத் ஸ்ரீ ராமானுஜரின் 1000 வது** திருநட்சத்திரம் **, ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகர் 750வது** திருநட்சத்திரம் வைபவமாக கொண்டாடப்படும் இச்சமயத்தில் **மீண்டும் எழுந்தருள செய்வது** எங்களை போன்ற பக்தர்களுக்கும், வைஷ்ணவ பாகவதோத்தமர்களுக்கும் **மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுகிறது.**

மேலும் இந்த கோயில் ஸ்தல வரலாறு, கல்வெட்டு குறிப்புகள் படி இவரே ஆதி மூலவர். இப்படி பல வைபவங்கள் உடைய இவரை தரிசனம் செய்வது நாம் கண்களை பெற்ற பயன். **பிறவியிலேயே கண் பார்வை இழந்த ஒருவருக்கு கண் பார்வை கிடைத்து, அது மீண்டும் இழந்தால் அவருக்கு எப்படி இருக்குமே அப்படி உள்ளது பக்தர்கள் நிலை.**

**கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள்....**நம் கூரத்தாழ்வாருக்கு கண்ணளித்து தன்னைக் காணச்செய்த **இந்த பெருமாளை தரிசனம் செய்து கொண்டே இருப்பதுதானே நாம் கண்கள் பெற்ற பயன்**.

ஶ்ரீ ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் பெருமாளை தரிசனம் செய்ய உலகம் முழுவதும் இருந்து ஏராளமான பக்தர்கள் வருடம் முழுவதும் வருகை புரிவார்கள். அதனால் நமது காஞ்சீபுரம் மற்றும் வரதர் கோயில் மேலும் மேலும் புகழ் பெறும்.

நமது நாடும், நமது திருக்கோயிலும் பல பெருமைகள், நன்மைகள் அடைய ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் தர்சன வைபவம நிரந்தரமாக இருக்க வேண்டும் என்ற **பக்தர்கள் ப்ராத்தனைகளை திருக்கோயில் முக்கியத்தர்கள், திருக்கோயில் அர்ச்சகர்கள், அத்யாபக கோஷ்டியினர், ஶ்ரீ வைஷ்ணவ பெரியோர்கள், இந்து அறநிலையத்துறை, தமிழக அரசு என்று அனைவரும் ஒன்றுபட்டு செவி சாய்த்து பக்தர்களின் பிராத்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.**

# அத்தி வரதன் வைபவம்

[ஸ்ரீ உ. வே. வித்வான் அய்யா கிருஷ்ண தாதாசார்யஸ்வாமி]

महिताभ्यां महत्सङ्घैः पुनानाभ्यामि मंजनम् ।
श्रीमद्भ्यां कृष्णताताचार्य पदत्राभ्यां नमोनमः ॥
यस्य प्रसादकलया बधिरः शृणोति पङ्गुः प्रधावति जवेन न च वक्तिमूकः ।
अन्धः प्रपश्यति सुतं लभते च वन्ध्या तं देव मेव वरदं शरणं गतोस्मि ॥

என்று பெரிய முதலியாரென்று நம் ஸம்ப்ரதாயத்திலே கொண்டாடப்படும் ஆளவந்தார் இராமானுசனை இத்தர்சநத்திற்கு ப்ரவர்த்தகராக்க வேணும் என்று ப்ரபத்தி பண்ணியருளின ச்லோகம் இதுவாயிருக்கும். இது தான்பேரருளாளன் விஷயமாய் நம்மாசார்ய கோஷ்டியில் முதல் அவதரித்த ச்லோக மென்பர். இந்த ச்லோகம் இப்போது அநந்தஸரஸ்ஸிலிருந்து மேலே எழுந்தருளி மண்டலாராதநம் கண்டருளும் அத்திவரதர் விஷய மாகவே அவதரித்திருக்கலாம் என்று ஊஹிக்க இடமுண்டு. நான்முகன் செய்த அச்வமேத யாகத்தில் ஆவிர்பவித்த பேரருளாளன் திவ்ய ஸௌந்தர்யத்துடன் ஸேவை சாதிக்க, நான்முகன் இப்பெருமானை விபவாவதார மாகவே எழுந்தருளி இருக்கச்செய்து பூர்ணாநுபவம் செய்துகொண்டு, தன்னுடைய ஜீவிதகாலம் முழுவதையும் கழிக்கவேணும் என்று அபேக்ஷித்தார். அப்போது பெருமாள் ப்ரக்ருதி மண்டலத்தில் இக்கார்யம் கைகூடாதாகையால், தன்னை அர்ச்சாரூபத்தில் எழுந்தருளப்பண்ணி ஸ்ரீ பாஞ்சராத்திரப்ரக்ரியையாலே ஆராதித்து மநோரதப்படி உத்ஸவாதிகளையும் பண்ணி அநுபவிக்கலாம் என்று நியமித்தார். அப்படியே ப்ருமனும் வெகுகாலம் செய்து, இவ்வேழைமலை நாயகனுரிடம் விடைபெற்று விண்ணுலகம் சென்றார். இப்படி நான்முகன் திருப்ரதிஷ்டை செய்த தினமே- சித்திரையீ அத்தநக்ஷத்திரம் அவதாரோத்ஸவ தினமாகக் கொண்டாடப்படுகிறது என்றது அனைவருக்கும் அறிந்த விஷயம். அப்போது பிருமதேவன்தான் ஏரியருளப்பண்ணின திருமேனி தாருமயமானது என்று ஸ்ரீ காஞ்சீ மாகாத்ம்ய புராணத்தில் தெளிவாய் காணப்படுகிறது. ஸ்ரீ தேசிகனும் இந்த திருமேனியை அநுஸந்திக்கும்போது "व्यपगतपरिकर्मवारवाणम्" என்று காப்பீடு திருமேனி அன்று என்றார். மூவ பேரம், திருமஞ்சனத்திருமேனி அதாவது சிலாமயம் இல்லாமல் போனால் அத்திருமேனியில் காப்பீடு திருமேனி சாத்துவதில்லை என்கிற அநுஷ்டாநம் இருக்கிறது. ஸ்ரீ பாஞ்சராத்திர வைகாநஸாகமங்களில்

சுதை, சிலை, தாரு, இவைகளில் ஒன்றை மூல பேரத்திற்கு உபாதானத்ரவ்ய மாக சொல்லப்பட்டிருக்கிறது. கோயில் திருமலை பெருமாள் கோயில் என்று ப்ரசித்தமான இம் மூன்று திவ்யதேசங்களே முறையே மூல பேர வடிவமாக ஸேவிக்கப்படுகின்றன. கோயிலில் சுதையும் திருமலையில் சிலை யும் ப்ரத்யக்ஷமாய் காணப்படும்போது பேரருளாளன் திருமேனி தாரு மயமாக வேண்டியிருக்க திருமஞ்சனத்திருமேனியாய் காணப்படுவதற்கு காரணமில்லை. இங்கு அநாதிகாலமாய் தாருமயமான திருமேனியே இருந்தது என்று ஊஹிக்க இடமுண்டு.

அடியேனுக்கு இவ்விஷயத்தில், ப்ரும்மாண்ட புராணாந்தர்கதமான ஸ்ரீ காஞ்சி மாஹாத்ம்ய பாராயணம் பண்ணும்போது ஸந்தேகம் உண்டா யிற்று. அப்போது அடியேனுக்கு பாமோத்தேச்ய பூதராய் எங்கள் வம் சத்தில் உதித்தவராய், எண்பது பிராயம் நிறைந்தவருமான தண்டரி தாதாசார்யஸ்வாமியிடம் விண்ணப்பம் செய்தேன். அவரும் பரம கிருபை யோடே அடியேனை கையைப் பிடித்தழைத்துக் கொண்டு பேரருளாளன் த்வஜஸ்தம்பத்தின் கீழ் பக்கம் இருக்கும் உதயபாது மண்டபத்தில் ஒரு சிலாசாஸநம் தெலுங்கு லிபியிலுள்ளதைக் காட்டி வாசிக்கச் சொன்ன போது அதில் பின் வருமாறு எழுதியிருந்தது.

"சாலிவாஹந சகாப்தம் 1703 ப்லவநாம ஸம்வத்ஸரம் ஆஷாட சுத்த தசமி சனிவாரம் அநந்த ஸரஸ்ஸின் நீரிரைத்தார்கள். அப்போது நீராழி மண்டபத்திற்கு தென்மேற்குக் கம்பத்திற்கு சரியாக அத்திகிரி வரதர் சயனித்திருக்கிறார்- என்று. இந்த ஈச்வர வருஷம் சாலிவாஹநம் 1860 ஆகையால் சிலாசாஸநம் செய்து 157 வருஷங்கள் ஆகின்றன. இத்தால் பெருமாள் தீர்த்தத்தில் எழுந்தருளின காலம் இன்னதென்று அறியக் கூடவில்லை. அதற்கு அந்த ஸ்வாமி சரித்திரம் ஒன்றை அருளிச் செய் தார். அதாகிறது—ஸ்ரீ தாத தேசிகன் காலத்திற்குப் பின்பு அவர் திருக் குமாரனை திருமலை தாததேசிகனும் வேங்கடவரத தாததேசிகனுமாய் பேரருளாளன் ஸ்ரீ கார்யம் நிர்வஹித்துக்கொண்டு போகும் காலத்திலே துருக்கரின் உபத்திரவத்தாலே பேரருளாளன் ஸன்னிதிக்கு என்ன வருகி றதோவென்று பயந்து ஒரு வருக்கும் தெரியாமல் பெரிய பெருமாளை திரு வநந்த ஸரஸ்ஸிலே ஜலாதி வாஸப்படுத்தி, மற்ற திரு மூர்த்திகளையும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, பெருமாளுக்குப் பாங்கான இடம் ஏதென்று தேடிக்கொண்டு, காடு பாய்ந்துபோகும்போது உடையார் பாளை யம் ஜமீனுக்கருகே சென்று, இது மிக்க மஹாரண்யமாயிருக்கையால் இங்கு வருவார் யாருமில்லை என்று எண்ணி, அந்தக் காட்டிலேதானே கொஞ்சகாலம் திருவாராதநம் நடத்திக்கொண்டு மெல்லமெல்ல அத்